Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No C.C.NO.270/2023, Kandili PS Cr.No.32/2021
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜய் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முத்துராமன் | தொழில் | JCB கிளீனர் |
| கிராமம் | கந்திலி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 05th day of May 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.- (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் JCB கிளீனர் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.02.2021 அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் அ.சா.1 கந்திலி பாரத் பெட்ரோல் பங்கிற்கு வேலைக்கு வந்தார். அன்று இரவு நாங்கள் வேலை செய்து கொண்டிருந்தோம். மறுநாள் காலை சுமார் 03.30 மணியளவில் நாங்கள் எழுந்து பார்த்தபோது TN 83 R 5463 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிறம் கொண்ட Dio வாகனத்தை காணவில்லை. அதன்பின்னர் சிசிடிவி கேமிராவை பார்த்தோம். அதில் 2 பேர் வாகனத்தை தள்ளிச் சென்றதாக தெரியவந்தது. பின்னர் அக்கம் பக்கம் தேடிப்பார்த்து கிடைக்காததால் 09.02.2021 அன்று நானும் அ.சா.1 ம் சேர்ந்து கந்திலி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அதன் பின்னர், போலீசார் பெட்ரோல் பங்கிற்கு வந்து விசாரணை செய்தனர். அதன் பின்னர் சுமார் 1 1/2 வருடம் கழித்து தான் வண்டி கிடைத்து விட்டதாக அ.சா.1 கூறினார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அந்த சம்பவம் நடைபெற்ற போது நான் பெட்ரோல் பங்கில் 1 நாள் மட்டும் தங்கியிருந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் இரவு பணி செய்து வருகிறேன். நானும் அ.சா.1ம், சத்யாராஜ் மற்றம் சரவணன், பெட்ரோல் பங்கின் மேனேஜர் ஆகியோர் 09.02.2021 அன்று காலை சுமார் 07.00 அல்லது 07.30 மணியளவில் புகார் கொடுக்க சென்ற போது போலீசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் சரிதான். நான் அன்றைய ஒரு நாள் மட்டும் பணிக்கு வந்தேனா என்றால் சரிதான். காவல் நிலையத்தில் போலீசார் விசாரணையில் என்னை விசாரித்தபோது நான் 07ம் தேதி பணி முடித்து விட்டு வீட்டுக்கு சென்று விட்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 09 ம் தேதி புகார் கொடுக்க புகார்தாரருடன் வந்ததால் தான் எனக்கு இந்த விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் மற்ற விவரங்கள் அனைத்தும் புகார்தாரர் கூறிதான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். வாகனம் திருடு போனது சம்பந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை:–**

Signature of Witness.